**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 30.06.2025**
**OS. No. 142/2019**
**வழக்கு சாட்சி DW.1–மணியரசு, த/பெ. குருசாமி**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**
11) வாதியின் வீட்டில் வாதி செல்லம்மாள் தான் குடியிருக்கிறார் என்றால் அவர் தான் இருக்கலாம். வாதிக்கு வேறு வீடு தாவா சொத்து அருகே உள்ளதா என்றால் இல்லை. 2023–2024 ம் ஆண்டிற்கு வாதியின் வீட்டிற்கு அவர் பெயரில் தான் வீட்டு வரி ரசீது உள்ளது என்றால் என்னிடம் காட்டப்படும் ரசீதின் படி உள்ளது. **மேற்கண்ட வாதியின் பெயரிலுள்ள வீட்டு வரி ரசீது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தாவா சந்து சம்மந்தமாக நகராட்சி உதவியாளர் வா.சா.4 ஆக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். அவரது சாட்சியத்தில் தாவா சந்தில் வாதியின் கழிவுநீர் குழாய் சிதலமடைந்துள்ளதாக நேரில் ஆய்வு செய்து, சாட்சியம் அளித்துள்ளார் என்றால் எனக்கு தெரியவில்லை, சந்தில் குழாய் எதுவும் சிதலமடையவில்லை.

12) தாவா சந்து வருவாய் துறை பெயரில்தான் தற்போது வரை ஆவணங்கள் உள்ளதாக வா.சா.4 சாட்சியம் அளித்துள்ளார் என்றால் எனக்கு தெரியவில்லை, தாவா சந்து வருவாய் துறையினருடையது தான், ஆனால் என்னுடைய பராமரிப்பில் உள்ளது. இந்த வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டுதான் தாவா சந்தின் வழியே வாசல் வைத்து வாதியிடம் பிரச்சனை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. என் பிரமாண வாக்குமூலத்தில் தாவா சந்தின் மேலே வாதியின் மின் பாதை செல்வதாக ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரிதான்.

13) தாவா சந்தின் வழியே தான் வாதியின் குடிநீர் இணைப்பும் செல்வதாக என் நிரூபண வாக்குமூலத்தில் ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரிதான், வாதி அவருடைய 600 சதுரடி இடம் போக அவரது வீட்டிற்கு வடக்கு பக்கம் உள்ள சுமார் 10 X 10 அடி இடத்தை எனக்கு கொடுப்பதாக சொன்னதால் நான் அனுமதித்தேன், ஆனால் தற்போது

வரை வாதி இடம் கொடுக்கவில்லை. மேற்படி விவரங்களை வாதி தன்னுடைய பிராதில் சொல்லியுள்ளார் என்றும், அந்த 10 X 10 அடியை நான் வாதியின் கணவரிடம் வாங்கிகொண்டு தான், தாவா சந்தை வாதி பயன்படுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. 2019 ம் வருடத்தில் என்னுடைய வீட்டிலுள்ள ஓடுகளை தாவா சந்தில் வைத்து வரக்கூடாது என்று பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல.

14) வருவாய் துறைக்கு பாத்தியப்பட்ட இடத்தை வாதி பயன்படுத்தவேண்டி என்னிடம் அனுமதி வாங்கவேண்டிய அவசியம் இல்லை என்றும், வாதி தான் அந்த தாவா சந்தை பயன்படுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சந்தை பொறுத்து நான் வரவேண்டியது இ ல்லை என்றும், அந்த சந்தை பொறுத்து நான் தேவையில்லாமல் பிரச்சனை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சந்தில் செல்லக்கூடிய கழிவுநீர் குழாயை அடைப்பட்டதால் வாதியின் வீடு முழுவதும் தேங்கிவிட்டது என்றும், அதை அகற்ற முயற்சி செய்தபோது, யாரையும் விடாமல் வாதியின் வீட்டை அபகரிக்கவேண்டும் என்று அவருடன் பிரச்சனை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் பதிலுரை தாக்கல் செய்யும் போது ஒரு மாதிரியாகவும், முதல் விசாரணையில் ஒரு மாதிரியாக நான் தாவா சந்தை அனுபவிப்பதற்கு வாதிக்கு அனுமதி கொடுத்தாக தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

15) தாவா சந்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், அது வருவாய் துறைக்கு சொந்தமான சந்து என்றும், நான் தாக்ல செய்துள்ள ஆவணங்கள் எதுவும் தாவாசந்து சம்மந்தமான ஆவணங்கள் இல்லை என்றும், என்னுடைய வீட்டிற்கும், காலி இடத்திற்கும் உண்டான ஆவணங்களை தாக்கல் செய்து விட்டு, வாதி அனுபவித்து வரும் தாவா சந்திற்கு இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சந்தில் என்னுடைய பைப் லை ன் எதுவும் செல்லவில்லை என்று மேட்டுர் நகராட்சி சார்பாக வா.சா.4 சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல, அதில் என் பைப் லைன் செல்கிறது. வாதி வீட்டில் கழிவறை நீர் தேங்கிவிட்டதால், அவர் கழிப்பிடத்திற்காக தற்போது வரை பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பறையை பணம் செலுத்தி பயன்படுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. வாதியை பெண் என்றும் பராமல் தொந்தரவு

செய்து வருவதால் தான் தாவா சந்தை அவர் பயன்படுத்தி வருவதை நான் தடை செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், அதில செல்லும் பைப் லைனை சரி செய்து பயன்படுத்தவேண்டும் என்று செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், அதனால் வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கவேண்டும் என்றும் அதை தடுப்பதற்கு எனக்கு எவ்வித அருகதையும் இல்லை என்றால் சரியல்ல.

ஓம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.